பதிவு எண். M 6311 ★ தொலைபேசி : 61331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 19] சென்னை : கார்த்திகை 13 (29—11—71) திங்கள் வெளியூர் : கார்த்திகை 14 (30—11—71) செவ்வாய் [இதழ் : 139

மின்னல் வேகப் பேருந்து; சென்னை—மதுரையிடையே விடப்படும்

மதுரை, நவ. 29—

மதுரைக்கும் — சென்னைக்கும் இடையே மின்னல் வேக விரைவுப் பேருந்து ஒன்றை விடத் தமிழ் நாடு போக்குவரத்துத் துறை முடிவு செய்திருக்கிறது.

இந்தப் பேருந்து, மதுரையில் காலை 6-30 மணிக்குப் புறப்பட்டு சென்னைக்கு மாலை 4-மணிக்குப் போய்ச் சேரும்.

சென்னையிலிருந்து பிற்பகல் 1

(2-ம் பக்கம் பார்க்க)

தமிழ்ப் பண்பாட்டை மறவாதீர்

அமெரிக்காவாழ் தமிழர்கட்கு கலைஞர் வேண்டுகோள்

கடல்கடந்த தமிழர்களின் அறிவைத் தமிழகத்துக்குப் பயன்படுத்த யோசனை

நியூயார்க், நவ. 29—

"தொழில் நுட்பம் — விஞ்ஞானம் ஆகிய துறைகளில் சிறந்து உயர் கல்வி பெற்ற தமிழர்கள் பலர் அமெரிக்காவில் குடியேறித் தொழில் நுட்ப வல்லுநர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் பணியாற்றி வருகின்றனர்; அவர்களின் அறிவாற்றல் — அனுபவம் ஆகியவை தமிழ்நாட்டுக்கும் பயன்படுகின்றவகையில், அவர்களைக் கவுரவப் பேராசிரியர்களாக நியமித்து — அவர்களைத் தமிழகத்துக்கு வரவழைக்க ஏற்பாடு செய்வது குறித்து யோசித்துவருகிறேன்.

"அப்படிக் கௌரவப் பேராசிரியர்களாகத் தமிழ்நாட்டுக்கு வருவோர், தங்களது அமெரிக்கத் தொடர்புகளை துண்டித்துக்கொள்ள வேண்டியதில்லை; அமெரிக்காவில் தாங்கள் மேற்கொண்டுள்ள பணிகளுக்குத் திரும்பிச் செல்ல அவர்களுக்குத் தேவையான வசதிகள் அளிக்கப்படும்.

"வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழ்மக்கள், தங்கள் இளந் தலைமுறையினருக்குத் தமிழ் மொழியையும்—தமிழ் பண்பாட்டையும் கற்பிக்க வேண்டும்.

"தமிழர்கள் தாங்கள் வேலை செய்கின்ற நாடுகளில் நிலவுகின்ற பண்பாட்டையொட்டி நட்புடன் வாழ்வது அவசியமே என்றாலும்—தங்கள் சொந்தப் பண்பாட்டுக்குத் திரும்பவேண்டியவர்களாக இருப்பதால் — தமிழர்களாகிய நாம் அயல்நாட்டுப் பண்பாடுகளோடு ஒன்றிக் கலந்து அடையாளமே தெரியாமல் அழித்துக்கொள்ள முடியாது.

"பண்டைத் தமிழ்ப் பாரம்பரியத்தில் 'நமக்கு எல்லாமே தெரிந்திருந்ததுதான்' என்று பெருமை பேசிக்கொண்டிருப்பது கூடாது; புதிய புதிய விஞ்ஞான உண்மைகளைக் கண்டறிய வேண்டுமென்ற உணர்வை அமெரிக்கர்களைப்போல நாமும் பெற வேண்டும்.

"தமிழ்நாட்டில் கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டுமென்பதில் கவலையோடிருக்கிறேன்; இந்த நோக்கத்துக்காக இங்கு அமெரிக்கக் கல்வியாளர்களைச் சந்தித்துப் பேச இருக்கிறேன்"

என்று, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், நியூயார்க் தமிழ்ச் சங்கத் துவக்க விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அமெரிக்கா வாழ் தமிழ்மக்களின் அமைப்பான நியூயார்க் தமிழ்ச் சங்கத்தை முதல்வர் கலைஞர் நேற்று துவக்கிவைத்து அரிய உரை நிகழ்த்தினார்.

நியூயார்க்கிலுள்ள இந்தியத் தூதரகக் கட்டிடத்து மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது.

டாக்டர் பி. எஸ் குமரேசன் கலைஞருக்கு வரவேற்பு மடல் படித்தளித்தார்.

கலைஞர் மேலும் பேசுகையில், அமெரிக்காவில் முன்னேறியுள்ள பல்வேறு நவீன விஞ்ஞானக் கூடங்களையும் கண்டு களித்தது குறித்து விளக்கினார்.

முரசொலி மாறன்

முரசொலி மாறன் எம்.பி. அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டார்; அவர் பேசுகையில்,

"இந்த அமைப்பினர், தமிழ்நாட்டிலிருந்து வந்துள்ள தமிழர்களை மட்டுமல்லாது இலங்கை—சிங்கப்பூர்—மலேசியா முதலிய நாடுகளிலிருந்து வந்திருக்கும் தமிழர்களையும் இணைத்துக்கொண்டு செயல்பட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இந்த விழாவில், இதுவரை கண்டிராத அளவுக்குத் தமிழர்கள் திரண்டு வந்திருந்து கலைஞரின் பேச்சைக் கேட்டனர்.

ஐ. நா. அவையில் முதல்வர் கலைஞர்

நியூயார்க், நவ. 27—

ஐ நா. அவையில் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு, மிக முக்கியமான தலைவருக்கு (வி.ஐ.பி) உரிய மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கலைஞர் அவர்கள், நியூயார்க் 'ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் நிலைய'த்திற்கு வருகை தந்தார்; அங்குள்ள கம்பியூட்டர் இயந்திரங்களின் வேலை முறை பற்றி அவருக்கு விளக்கிக் கூறப்பட்டது.

ஐ நா. அவையில் தமிழக முதல்வருக்கு விருந்து அளிக்கப்பட்டது; அந்த விருந்தில், ஐ நா. பொதுச் செயலாளர் அலுவலகத்தின் தலைமை அதிகாரி சி. வி. நரசிம்மன், இந்தியத் தூதுவர் சாமர் சென், மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

பிற்பகலில் ஐக்கிய நாடுகள் சபையின் பொது மன்றக் கூட்டத்தில் தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டார்.

ஐ. நா. சபையில் இந்தியாவின் பிரதிநிதிகள் அமரும் இடத்தில் முதல்வர் அமர்ந்தார்.

பின்னர், திரு. சி. வி. நரசிம்மன், முதல்வருக்கு ஒரு வரவேற்பு அளித்தார்; இந்த வரவேற்பில் இந்தியர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டார்கள்.

திரு. நரசிம்மன், கலைஞர் அவர்களை வரவேற்றுப் பேசினார்; அந்த வரவேற்புக்கு முதலவர் தக்க முறையில் பதிலளித்தார்.

ஊ-தாண்டுடன் பேச்சு

ஐ. நா. அவையின் பொதுச்செயலாளர் ஊ-தாண்டுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரது உடல்நலத்தை விசாரித்தார்.

திரு. ஊ-தாண்ட் உடல் நலமின்றி மருத்துவமனையில் இருக்கின்ற காரணத்தால் அவரைப் பார்வையாளர்கள் சென்று காண இயலாது.

முதல்வர் அவர்களின் நல்வாழ்த்துக்களுக்கு ஊ-தாண்ட் நன்றி தெரிவித்தார்.

நிருபர்கள் கூட்டத்தில்

செய்தியாளருக்குக் கலைஞர் பேட்டியளித்தபோது, ஐ. நா. அவையில் பாகிஸ்தான் தலைமைப் பிரதிநிதி பேசிய பேச்சு பற்றிக் குறிப்பிட்டு செய்தியாளர்கள் முதலமைச்சரிடம்

(4-ம் பக்கம் பார்க்க)

ஓரடி மண்ணையும் விட்டுக் கொடுக்க மாட்டோம்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். வீரமுழக்கம்

சென்னை, நவ. 29—

'பெண்ணுக்குத் தலைவணங்குவதா — என்று யாகியா கான் கேட்டிருக்கிறார்; ஒரு பெண்ணின் வயிற்றில்தான் வளர்ந்தோம்' என்பதை உணராமல் பெண்மைக்கே மாசு கற்பித்துவிட்டார்.

'தலைமையமைச்சர் இந்திரா காந்தி, தியாகப் பரம்பரையில் வந்தவர்; அவரைத் தலைமையமைச்சராக மட்டும் அல்லாமல் தாயாகவும் – உடன்பிறவா சகோதரியாகவும் நாம் அவரை மதிக்கிறோம்; அப்படிப்பட்டவரை சர்வாதிகாரி யாகியா கான் பழித்துக் கூறுகிறார்!

'இங்கு, இந்து – முஸ்லிம் – கிறிஸ்தவர்களை மத வழியாகப் பிரித்து வெற்றி பெறலாம் என்று யாராவது கற்பனை செய்தால் அவர்களுக்கு இட்லரின் கதிதான் வரும்!

'இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள், நம்முடன்தான் ஒத்துழைப்பார்கள் என்பதில் நமக்குச் சந்தேகம் இல்லை.

ஓர் அடி மண்ணைக்கூட எதிரிக்குப் போகவிடமாட்டோம் – என்ற உறுதியை அனைவரும் எடுத்துக்கொள்ள வேண்டும்!

'முஸ்லிம்களைப் பிரித்து – கலங்கிய குட்டையில் யாகியா கான் மீன் பிடிக்க வேண்டாம் என்று கழகத்தின் சார்பாக எச்சரிக்கிறேன்.

''கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கு இல்லாததால் அவர் சார்பாக – 'கழகத்தின் பொருளாளன்' என்ற முறையில் இந்த எச்சரிக்கையை விடுக்கிறேன்."

—வேலூர் பாராட்டு விழாவில்

பாகிஸ்தான் ஒப்புக்கொள்ளும் உண்மை!

இராவல்பிண்டி, நவ. 29—

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள மக்கள் பெரும்பாலும் விடுதலைப் படையினருக்கு உதவுகின்றனர் என்பதை முதல் தடவையாக பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

ஜெஸ்ஸூரில் அவர்களைப் பாகிஸ்தான் படை விரட்டியதாக ஓர் அதிகாரி கூறினார்; மற்றும் 4 இடங்களில் சண்டை நடந்ததாகவும்—30 கொரில்லாக்களைப் பாகிஸ்தான் படைகள் கொன்றதாகவும், சில ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் அவர் சொன்னார்.

"கிழக்கு வங்க இராணுவத்திலிருந்து — போலீசுப் படையிலிருந்து விலகியவர்கள், கொரில்லாப் படையை அமைத்துக் கொண்டிருப்பதாகவும், தற்போது 50,000-த்துக்கு அதிகமாக கொரில்லாக்கள் உள்ளனர்" என்றும் அதிகாரி கூறினார்.

எதிரியை விரட்டுவதற்கு எப்படியும் செயல்படுக!

இந்திய இராணுவத்துக்குக் கட்டளை

ஸ்ரீநகர், நவ. 29—

"பாகிஸ்தான் படை தாக்கினால், சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி எப்படி வேண்டுமானாலும் செயல்பட காஷ்மீர் எல்லையில் இருக்கும் இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது" என்று இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

'முறைகேடாக' நடந்துகொண்டால் சரியான பதில் கிடைக்கும் என்பதை, ஏற்கனவே எதிரிகளுக்கு உணர்த்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த நவ. 9-ம் நாளன்று, ஊரி பகுதி எல்லைச் சாவடி ஒன்றுக்குக் காஷ்மீர் முதலமைச்சர் வந்து சென்றவுடனேயே பாகிஸ்தான் படையினர், அச்சாவடி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அவர்களை ஒரு சில நிமிடங்களிலேயே நமது வீரர்கள் முறியடித்த நிகழ்ச்சி ஒன்றை அந்தத் தளபதி தெரிவித்தார்.

எதிரிகள், காயமடைந்தவர்களை எடுத்துச் செல்வதில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

இதுபோல் பல பகுதிகளிலும் பாகிஸ்தான் இராணுவத்தினருக்குச் சரியான பதிலடி கொடுத்துவருவதாக அந்தத் தளபதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சுதந்தரச் சுடர் அணையாது

[✶]

பெரும்பான்மை மக்களின் இலட்சிய உணர்வைக் கொடுமை இழைப்பதன் மூலம் ஒதுக்கிவிட முடியாது

வங்க தேசப் பிரச்சினையை இந்தியா உருவாக்கவில்லை-- அந்நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும் ஆசைகளையும் அடிப்படையாகக் கொண்டது

தலைமை அமைச்சர் இந்திரா காந்தி திட்டவட்ட அறிவிப்பு

ஜெய்ப்பூர் நவ. 29—

"சுதந்தரத் தீபம் ஒருமுறை ஏற்றப்பட்டுவிடுமானால், பிறகு அதை எவராலும் அணைக்க முடியாது; இது ஒன்று தான் நமக்குத் தெரிந்த ஒன்றாகும்; ஆகவே, வங்க தேச மக்கள், இனி சுதந்தரம் பெறுமல் ஓய மாட்டார்கள் என்பதுதான் உண்மை நிலவரமாகும்.

"வங்க தேசப் பிரச்சினை, சிறுபான்மையினரின் கிளர்ச்சியன்று -- அது பெரும்பான்மை மக்களின் இலட்சியக் கனவாகும்.

"வங்காள தேசப் பிரச்சினையை இந்தியா உருவாக்கவில்லை; அது, மற்றொரு நாட்டின் பிரச்சினையாகும்; அந்த நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும் -- ஆசைகளையும் அடிப்படையாகக் கொண்ட பிரச்சினையாகும்; இந்தியா அவர்களுக்கு ஆலோசனை மட்டும்தான் கூற முடியும்; ஆனால், தங்களுடைய எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளவேண்டியது அவர்களுடைய சொந்த உரிமையாகும்.

"வங்க தேசப் பிரச்சினை, பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினைதான்; ஆனால், மனித சரித்திரத்தில் இல்லாத அளவுக்குப் பெரும்பான்மையான மக்கள் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கின்ற பிரச்சினையாகியிருக்கின்றது; ஆகவேதான், வங்காள தேச மக்களிடம் நாம் அனுதாபம் காட்டுகிறோம்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் இராஜஸ்தான் தலைநகரான ஜெய்ப்பூரில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

'இந்தத் துணைக்கண்டத்தில் எல்லாம் நல்லபடியாக இருக்கிறது' என நினைத்தன; பாகிஸ்தான் தனது படைகளை எல்லைகளுக்கு அனுப்பிய போது, 'ஒத்திகையில்தான் ஈடுபட்டிருக்கின்றன' என்று அந்நாடுகள் கூறிவந்தன; இறுதியாக, 'நமது பாதுகாப்புக்கு அபாயம் ஏற்பட்டுக்கூடும்' என்பதை உணர்ந்து -- நாமும் நமது படைகளை எல்லைகளுக்குக் கொண்டுவந்தபோது மட்டும், 'இந்தத் துணைக்கண்டத்தில் போர் வெடித்து எழக்கூடிய அபாயம் ஏற்பட்டுவிட்டது' என்று வல்லரசுகள் நினைக்கின்றன; இந்த நிலைமை ஏற்படுவதற்கு யார் பொறுப்பு?

வங்க தேசத்திலிருந்து ஓடிவந்துள்ள அகதிகள், தங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டியவர்களே; அவர்களைத் தற்காலிகமாகத்தான் இந்தியா குடியமர்த்தியிருக்கிறது; 'அகதிகளுக்கு உலக நாடுகளும் உதவும்' என்ற நம்பிக்கையில், அவர்களுக்கு இந்தியா புகலிடம் அளித்தது; ஆனால், அகதிகள் பிரச்சினையைக் கையாள்வதில் இந்தியா காட்டிவரும் தைரியத்தையும் -- நிதானத்தையும் பாராட்டுவதுடன் உலக நாடுகள் நின்றுவிட்டன; வேறு எதனையும் செய்யவில்லை; நாம் ஏமாற்றமடைந்தோம்."

பாதுகாப்புக் கவுன்சிலிடமிருந்து நியாயத்தை எதிர்பார்ப்பதா?

தலைமையமைச்சர் இந்திரா காந்தி மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"இந்தியத் துணைக் கண்டத்தில் தற்போது நிலவும் நெருக்கடிப் பிரச்சினையைப் பாதுகாப்புக் கவுன்சிலுக்குக் கொண்டு போவதால் நிலைமை தணிந்து விடப்போவதுமில்லை-- அதனால் நிலைமையில் உருப்படியான மாறுதல் எதுவும் ஏற்பட்டு விடப்போவதுமில்லை.

"தற்போது இந்தியாவிலுள்ள வங்க தேச அகதிகளின் சுமைகள் குறித்துத் தெரிந்துகொள்வதற்கான சிரத்தைக்காட்டாத பாதுகாப்புக் கவுன்சிலிடமிருந்து நியாயத்தை எதிர்பார்ப்பதற்கில்லை.

"கடந்த காலத்தில் பாகிஸ்தான் நம்மீது நடைமுறை ஆக்கிரமிப்பு செய்துள்ளது; நாம் பாகிஸ்தானை தாக்கவில்லை என்பது பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை; ஆனால், இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக நமக்கு உதவப் பாதுகாப்புக் கவுன்சில் என்ன செய்திருக்கிறது? 'ஆக்கிரமித்தது யார்' என்பதைக்கூட அது சொல்லவில்லை!

சாதாரணச் சுமையன்று!

வங்க தேசப் பிரச்சினைகளால் பொருளாதார -- சமூக -- அரசியல் துறைகளில் நமக்குப் பெருஞ்சுமை ஏற்பட்டிருக்கிறது; இந்தச் சுமையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தே தீருவோம்!

உலகத்திற்கு நாம் சொல்வதுஇதுதான்

இந்தியா போரை விரும்பவில்லை; பாகிஸ்தானுடன் நேசமாகவும் -- சமாதானமாகவும் இருக்கவே விரும்புகிறது; ஆனால், நமது சுதந்தரத்துக்கு அபாயம் ஏற்பட்டால், நாம் வாளாயிருந்துவிட முடியாது; உலகத்திற்கு நாம் குறைந்த பட்சமாகச் சொல்லக்கூடியது இதுதான்.

இந்த நிலை ஏற்பட்டதற்கு யார் பொறுப்பு?

எல்லைகளில் இந்தியா படைகளைக் கொண்டுபோய் நிறுத்திய பிறகு மட்டும் 'பெரும் வல்லரசுகள்' கூக்குரல் எழுப்புவது வேடிக்கையானது -- விசித்திரமானது!

நாம் நிலைமையைக் கவனித்துக்கொண்டு வாளாயிருந்த வரையில் இந்த வல்லரசுகள்,

மிரட்டவுமில்லை--மிரட்டலைக் கண்டு பயப்படவுமில்லை

நாம் யாரையும் மிரட்டவும் இல்லை--மிரட்டல்களைக் கண்டு பயந்துவிடவுமில்லை.

எந்த நிலைமையையும் சமாளிக்க நமது இராணுவம் முழு அளவில் தயாராக இருக்கிறது.

அதுபோன்று, போரைச் சந்திப்பதற்கு மக்களும் தயாராக இருக்கவேண்டும்; கட்டுப்பாட்டுடனும் நிதானத்துடனும் எந்த வித நிலைமைகளையும் சமாளிக்க முனையவேண்டும்.

முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து செல்வோம்

"இந்தியா, தனது சொந்தக் காலில் நிற்கிறது என்பதையும் -- இனியும் அப்படியே நிற்கும் என்பதையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவோம்!

நாம், மற்றவர்களைச் சார்ந்து நிற்கவில்லை -- மற்றவர்கள் சொற்படியும் நடக்கவில்லை!

தற்போதைய நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளித்து -- இந்தியா தனது முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து செல்லும்.

எந்த வல்லரசும் பாகிஸ்தானுக்கு உதவப்போவதில்லை

வங்க தேச நெருக்கடியை இந்தியாவுடனான தகராறு எனக் காட்ட யாகியா கான் முயற்சி

'எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயார்' என இந்திரா காந்தி அறிவிப்பு

புதுடில்லி, நவ. 27—

"வங்க தேச நெருக்கடியைப் பாகிஸ்தான் முற்றுமாக செய்தால் அந்நாட்டின் தரப்பில் பெரிய வல்லரசுகள் எதுவும் சேரும் எனத் தோன்றவில்லை"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, கவர்னர்கள் மாநாட்டில் கூறினார்.

"இந்தியா முதலில் போரில் இறங்காது" என்பதை அவர் உறுதி செய்தார்; ஆனால், 'எத்தகைய அவசர நிலைக்கும் நாட்டு மக்கள் தயாராக இருக்க வேண்டும்' என்று அவர் எச்சரித்தார்.

"எத்தகைய நிலவரத்தையும் சமாளிக்க நமது படைகள் தயார் நிலையில் உள்ளன" என்றும் அவர் கூறினார்.

"வங்க தேச நெருக்கடியை இந்தியா -- பாகிஸ்தான் தகராறாகக் காட்டி, ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலைத் தலையிடுமாறு செய்யும் பாகிஸ்தானின் முயற்சி வெற்றி பெறப் போவதில்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"வங்க தேசப் பிரச்சினையை ஆழ்ந்து பரிசீலித்து, இராணுவ ஆட்சியாளர்கள் வங்க தேசத்தில் இழைத்த கொடுமையை நீக்கத் தயாராக இருந்தால், 'அனைத்து நாட்டுப் பார்வையாளர் குழு'வை வரவேற்பதற்குத் தயார்" என்று அவர் மீண்டும் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தானின் புகார் எதுவாயினும் அதற்கும் பதிலளிக்க இந்தியாவிடம் போதுமான ஆதாரங்கள் உள்ளன."

கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

"மூன்றாவது தரப்பு நாடுகளிடமிருந்துகூட பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் கிடைக்காது -- என்று அமெரிக்கா தெளிவாக உறுதிகூறியிருக்கிறது; ஆனால் அமெரிக்க ஆயுதங்கள் பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளனவா என்பது பற்றித் திட்டவட்டமான தகவல் இல்லை."

வல்லரசுகளின் கடமை என்ன?

அமைச்சர் ஜெகஜீவன்ராம் வலியுறுத்தல்

கல்கத்தா நவ. 29—

"எல்லையிலிருந்து படைகளைத் திரும்பப் பெறுமாறு இந்தியாவுக்குச் சில வல்லரசுகள் ஆலோசனை கூறுகின்றன; இத்தகைய ஆலோசனையைக் கூறுவதற்குப் பதில், இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகள் திரும்பிச் செல்வதற்கு அந்த வல்லரசுகள் முயற்சிக்க வேண்டும்; இப்பிரச்சினையில் அவை, இந்தியாவுக்கு உத்தரவாதமளிக்க வேண்டும்; ஏனெனில், இதன் தொடர்பாகப் பாகிஸ்தானின் போக்கை நம்ப இயலாது.

"வங்க தேச அகதிகள் கௌரவத்துடனும் -- பாதுகாப்புடனும் திரும்பிச் செல்லும் வரையில், எல்லையிலிருந்து தனது படைகளை இந்தியா திரும்பப்பெறாது"

என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம், வட கல்கத்தாவில் மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் திட்டவட்டமாக அறிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகளை யாகியா கானின் பாகிஸ்தானுக்குள் நாங்களாகத் தூக்கி வீசியெறிந்துவிட முடியாது; அவர்களாகவே முஜிபுர் ரகிமானின் வங்காள தேசத்துக்குப் பாதுகாப்புடன் திரும்பிச் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

"துப்பாக்கி முனையில் அகதிகளின் வருகையை -- இந்தியா போன்ற நாடுகள் தடுத்து நிறுத்திவிட முடியாது; அகதிகளைப் பராமரிக்க இந்தியா நாள்தோறும் ரூ. 3 கோடி செலவிடுகிறது.

"வங்க தேசம் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட்டால் தான், அகதிகள் நம்பிக்கையுடன் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்ப முடியும்; சுதந்தரத்துக்குக் குறைவான தீர்வு எதையும் வங்க தேச மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் திட்டவட்டமாக நிராகரித்துவிட்டதால், சுதந்தரம் அளிப்பதே சிறந்த வழியாகும்.

"தியாகத்தின்மூலம் வங்க தேச மக்கள், விரைவில் சுதந்தரம் பெறுவர் என நம்புகிறேன்."

மேற்குப் பாகிஸ்தானும் உடையும் நிலை

அச்சத்தால் தேசீய அவாமிலீக் கட்சிக்குத் தடை

அடக்குமுறைக் கெடுபிடி --- தலைவர்கள் கைது செய்யப்படுகின்றனர்

புதுடில்லி, நவ. 27—

மேற்குப் பாகிஸ்தானில் தகராறுகளைத் தூண்டிவிட முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டி, தேசீய அவாமி கட்சியை பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் தடை செய்துவிட்டார்; தலைவர்களைக் கைது செய்யவும் உத்தரவிட்டிருக்கிறார்.

எதிரிகளுடன் கூடிக்கொண்டு நாட்டின் பாதுகாப்புக்கும் -- ஒருமைப்பாட்டுக்கும் விரோதமாகத் தேசிய அவாமி கட்சி (முஜிபுர் ரகிமான் கட்சியின் பெயர் அவாமி லீக்) தலைவர்கள் வேலை செய்து வருவதாக அதிபர் யாகியா கான் கூறியதாக பாகிஸ்தான் வானொலி கூறியது.

கடந்த டிசம்பர் தேர்தல்களில் பாகிஸ்தான் தேசிய சட்டமன்றத்தில் தேசிய அவாமி கட்சிக்கு 6 இடங்கள் கிடைத்தன.

வட மேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் -- பலுசிஸ்தானத்திலும் மாகாண சட்டசபைகளில் இக்கட்சிக்குத்தான் பெருவாரியான இடங்கள் கிடைத்தன; இங்கெல்லாம் பூட்டோவின் கட்சி தலை தூக்க முடியவில்லை.

வைத்திருக்கமுடியாது என்பதையும் உணர்ந்துவிட்டார்.

"மேற்குப் பாகிஸ்தான்—கிழக்குப் பாகிஸ்தான் ஆகிய இரு பகுதிகளிலும் ஆதரவாளர்களைக் கொண்டுள்ள ஒரே கட்சி தேசிய அவாமி கட்சி ஒன்றுதான்.

"பலுசிஸ்தானிலும், வடமேற்கு எல்லை மாகாணத்திலுமுள்ள மக்கள் தங்கள் போராட்டத்தை மீண்டும்தொடங்குவதற்கு உரிய நேரத்துக்காகக் காத்திருக்கிறார்கள்."

அச்சத்தின் எதிரொலி

முஜீப்நகர், நவ. 27—

"மேற்கும் பாகிஸ்தானில்தேசிய அவாமி கட்சியை பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் தடை செய்துள்ளதற்குக் காரணம், மேற்கு பாகிஸ்தான் உடைந்துவிடும் என்ற அச்சம் அவருக்கு அதிகரித்திருப்பதுதான்"

என்று தேசிய அவாமி கட்சித் தலைவர் ஒருவர் கூறினார்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"வங்காள தேச விடுதலைக்காகப் போராடும் பல்வேறு சக்திகளிடையே பிளவு ஏற்படுத்தப் பாகிஸ்தான் அரசு முயன்று தோல்வி கண்டது; அதன் விளைவாகத் தேசிய அவாமி கட்சியை தடை செய்ய அது முடிவு செய்துள்ளது; கட்சி தடை செய்யப்பட்டுள்ளதால், தேசிய அவாமி கட்சியின் ஊழியர்களும்--பொது மக்களும் யாகியா கானின் பாசிச ஆட்சியை எதிர்த்துக் கடுமையான இயக்கத்தைத் தொடங்க வேண்டி வரும்."

உண்மையை உணர்ந்ததன் எதிரொலி

முஜிப் நகர், நவ. 29—

"[illegible] வாலிகான் தலைமையிலுள்ள தேசிய அவாமி கட்சியைத் தடை செய்திருப்பதே இந்து --- பாகிஸ்தான் [illegible] மேற்கு எல்லை மாகாணங்களை வங்க தேச விடுதலைப் போர் பாதித்திருக்கிறது என்பதற்கு ஒரு திட்டவட்டமான அறிகுறியாகும்"

என்று இந்தக் கட்சியின் செயலாளரான அல்டாப் உசேன் ஒரு பேட்டியில் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சுதந்தர வங்கதேசம் என்பது ஏற்படத்தான் போகிறது; ஆனால், 'எவ்வளவு காலத்தில்' என்பதுதான் கேள்வியாகும் என்பதை யாகியா கானே உணர்ந்துவிட்டிருக்கிறார்.

"சுதந்தர வங்கதேசம் ஏற்பட்டுவிட்டால், மற்ற பாகிஸ்தான் மாகாணங்களைக் கட்டிப்பிடித்து

பாகிஸ்தான் இராணுவத்துக்கு......

எவரையும் கைது செய்ய அதிகாரம்

விசாரணையின்றிக் காவலில் வைக்கப்படுவர்

இராவல்பிண்டி, நவ. 29—

பாகிஸ்தானில் யாரையும் கைது செய்து விசாரணை இல்லாமல் காவலில் வைக்க, இராணுவத்துக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் அவசர நிலைமை பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்புச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; அது பற்றிய விவரங்கள் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன; அது வருமாறு:—

பாதுகாப்புச் சட்டத்தின்படி, 'பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு ஆபத்தானவர்' என்று சந்தேகிக்கும் யாரையும் கைது செய்து விசாரணை இல்லாமல் காவலில் வைக்கப் பாகிஸ்தான் இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகைகள் -- வானொலி -- வெளிநாட்டுக்காரர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும், துறைமுகம் -- விமான நிலையம் -- இரயில் நிலையம் ஆகியவைகளின் அருகிலுள்ள மக்களை காலி செய்யவும் இராணுவத்துக்குப் பாதுகாப்புச் சட்டம அதிகாரம் கொடுத்திருக்கிறது.

லாரி -- டிரக்குகளை ஒப்படைக்கத் தவறினால் கடும் தண்டனை

லாரி -- டிரக் வண்டிகள் வைத்திருப்பவர்கள், அவற்றை, இன்று மாலை 4-மணிக்குள் இராணுவத் தலைமை நிலையத்தில் கொண்டு போய் ஒப்படைத்து விடவேண்டும்; தேவைப்படும் லாரி -- டிரக்வண்டிகளை இராணுவத்தினர் எடுத்துக் கொள்வார்கள்; அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் நாட்களில், அவற்றின் உரிமையாளர்களுக்கு ஒரு தொகை வழங்கப்படும்.

இந்த உத்தரவுப்படி லாரி -- டிரக் வண்டிகளை ஒப்படைக்காதவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்; பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி அவர்களுக்கு 5 ஆண்டு முதல் மரண தண்டனை வரை விதிக்கப்படும்.

அமெரிக்காவின் பழைய பல்லவி

போரைத் தவிர்க்கப் புதிய முயற்சியாம்

கலிபோர்னியா, நவ. 29—

இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெறும் எல்லை நிகழ்ச்சிகள் போராக முற்றாமல், முடிந்த அளவுக்கு முயற்சி செய்து தடுக்கும்படி கேட்டுக்கொண்டு, இந்தியா—பாகிஸ்தான் — இரஷ்யாவுக்கு அமெரிக்க அதிபர் நிக்சன் செய்திகள் அனுப்பியிருக்கிறார்.

இங்குள்ள அமெரிக்க அரசாங்க (மேற்கு) மாளிகையிலிருந்து இந்தச் செய்திகள் இந்திரா காந்திக்கும் -- யாகியா கானுக்கும், கோசிஜினுக்கும் அனுப்பப்பட்டன.

இந்த நெருக்கடியைத் தவிர்க்கும் முயற்சியில் தானே நேரடியாக குறுக்கிடுவது என்று நிக்சன் முடிவு செய்து -- இந்தச் செய்திகளை அனுப்பிருக்கிறார்; இதற்கு மேல் அமெரிக்கா என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அவர் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்.

'கிழக்கு வங்கத்தில் இந்தியா-- பாகிஸ்தான் படைகள் மோதலைத் தவிர்த்து, இருதரப்பினரும் திரும்பிச் செல்வதன்மூலம் நிலைமை போரில் போய் முடியாமல் தவிர்க்க முடியும்" என்று நிக்சனின் வேண்டுகோள் கூறுவதாகத் தெரிகிறது.

அவாமி லீகின் முன்னாள் துணைத் தலைவர் கைது

இராவல்பிண்டி, நவ. 29—

அவாமி லீகின் முன்னாள் துணைத் தலைவரான கான் குலாம் பெஷாவரில் கைது செய்யப்பட்டார்.

ஷேக் முஜிபுர் ரகிமானை விடுதலை செய்ய வேண்டுமென்றும், அவாமி லீக் மீதுள்ள தடையை நீக்க வேண்டுமென்று அண்மையில் அவர் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்தியா-சீன உறவு

தூதுவர் அனுப்புவது பற்றி மத்திய அமைச்சர்

புதுடில்லி, நவ. 28—

"இந்தியா – சீனாவுக்குமிடையே சுமூக உறவு ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பீகிங்குக்கு இந்தியா தானாகவே தூதுவர் ஒருவரை அனுப்பும் சாத்தியக்கூறுகள் பற்றி இந்திய அரசு யோசிக்குமா?"

என்று நாடாளுமன்ற மேலவையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கும் பதிலளிகையில் வெளிவிவகார அமைச்சர் சுவரண் சிங், 'இந்த சாத்தியக்கூறு இல்லை என்று சொல்வதற்கில்லை' என்று தெரிவித்தார்.

கேள்வி:—"சீனாவுடன் வர்த்தக உறவுகளைத் துவக்குவதைப் பற்றி இந்தியா யோசிக்குமா?"

அமைச்சர்:—"உறவு சீர்திருந்துகையில் வர்த்தகமும் துவங்கும் -- துவங்க வேண்டியதுதான்; பொருளாதாரத் துறையில் அனைத்து நாட்டு மட்டத்தில் மிகுந்த ஒத்துழைப்பு நிலவ வேண்டும் என்று இந்தியா கருதுகிறது; ஏனெனில், வாணிபம் என்பது அரசியல் விவகாரங்களில் ஒரே கருத்து கொண்ட நாடுகளிடையில் மட்டும் நடப்பதன்று."

கேள்வி:—"சீனாவுடன் உறவு சீர்திருந்தும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறதா?"

அமைச்சர்:—"நம்பிக்கை இல்லாவிட்டாலும்கூட, நமது நீண்ட கால நலனுக்குரிய கொள்கையைப் பின்பற்றிப் பார்க்க வேண்டும்."

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"1962-ம் ஆண்டுப் போருக்குப் பிறகு சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் இயல்பான உறவு இல்லை என்பது உண்மையே; ஆனால், பல ஆண்டுகளுக்குப் பிறகு, சீனாவுடன் இயல்பான உறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு இந்திய அரசு முயலுகிறது; இது விரும்பத்தக்கது; இது அவை முழுவதும் -- மக்கள் முழுவதும் ஆதரிக்க வேண்டுவதாகும்.

இந்தியா அதன் நலவுரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியதுதான்; ஆயினும், இயல்பான உறவு கொள்வதற்கு நாம் திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது நமது சொந்த நலனைப் பொறுத்ததே."

சிறு தொழில் வளர்ச்சி

புதுடில்லி, நவ. 27—

"சிறு தொழில்களின் வளர்ச்சிக்காகத் தனிச் சட்டம் கொண்டுவருவது பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்துவருகிறது"

என்று நாடாளுமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், தொழில் வளர்ச்சித் துறை துணையமைச்சர் சித்தேசுவர பிரசாத் தெரிவித்தார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மணிக்கும் புறப்படும் பேருந்து, இரவு 10-30 மணிக்கு மதுரை வந்து சேரும்.

வழியில் திருச்சி, விழுப்புரம், திண்டிவனம் ஆகிய இடங்களில் மட்டுமே இப்பேருந்துகள் நிற்கும்.

பேருந்து ஊழியர்கள் வேலையிழக்கமாட்டார்

அமைச்சர் இராமச்சந்திரன் உறுதி

பயணிகட்கு மேலும் வசதி அளிக்க நடவடிக்கை

திருச்சி, நவ. 29—

"பஸ்கள் அரசுடைமையாவதால், தொழிலாளர்கள் வேலை இழக்கமாட்டார்கள்"

என்று, தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் கூறினார்.

திருச்சியில், நிருபர்களுக்கு பேட்டியளிக்கையில், அவர் மேலும் கூறியதாவது:—

"பொதுமக்கள் வசதியை முன்னிட்டு அரசாங்க விரைவுப் பேருந்துகளில் பல மாறுதல்கள் செய்ய இருக்கிறோம்; பழைய பேருந்துகளைத் திருமபப் பெற்றுக்கொண்டு புதிய பேருந்துகள் விடப்படும்.

'ஒரு நாளைக்கு ஒரு புதிய பஸ்' என்ற விகிதத்தில் புதிய பஸ்கள் கட்டப்படுகின்றன.

இரவில் பயணம் செய்வதற்கு வசதியாக மாவட்டத் தலைநகரங்களிலிருந்து, பல ஊர்களுக்கு இரவு நேரப் பேருந்து விடப்படும்.

திருச்சி—சென்னை, திருச்சி—நாகர்கோவிலுக்கு இரவு நேரப் பேருந்துகள் விடப்படும்.

தனியார் பேருந்துகள் அரசுடைமையாவதால், அந்த நிறுவனங்களில் பணியாற்றும் எந்த ஊழியரும் வேலையிழக்கமாட்டார்கள்; எல்லா ஊழியர்களும் அப்படியே வேலைக்கு எடுததுக் கொள்ளப்படுவார்கள்; படிப்படியாக எல்லாப் பேருந்துகளும் நாட்டுடைமையாக்கப்படும்.

திருச்சியை அடுத்த செம்பட்டியில் -- ரூ. 8 இலட்சம் செலவில் -- அரசுப் பேருந்து பழுது பார்க்கும் தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது; அதேபோல், எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்."

கள் விடப்படுகின்றன; ஒரு பேருந்து பல்லடம்—திண்டுக்கல் வழியாக (2 'டிரிப்'கள்) செல்லும; மற்றொரு பேருந்து திருப்பூர்—பழனி வழியாக (2 'டிரிப்'கள்) போகும்.

கோவையிலிருந்து பழனி வழியாகத் திண்டுக்கல்லுக்கு மற்றொரு விரைவுப் பேருந்து (3 'டிரிப்'கள்) பயணமாகும்.

சென்னை --- திருச்சிக்கு இடையே மேலும் இரண்டு இரவு நேரப் பேருந்துகள்

திருச்சி, நவ. 29—

டிசம்பர் 5-ந் தேதியிலிருந்து திருச்சி — சென்னைக்கிடையே அதிகப்படியாக இரண்டு இரவு நேரப் பேருந்துகளும், திருச்சி—நாகர்கோவிலுக்கிடையே இரு இரவு நேரப் பேருந்துகளும் விடப்படும்.

போக்குவரத்து அமைச்சர் ச. இராமச்சந்திரன் அவர்கள், திருச்சியில் உள்ள அரசுப் போக்குவரத்து அதிகாரிகளுடன் விவாதித்தபின் நிருபர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

திருச்சியிலிருந்து அதிகப்படியாக சென்னைக்கு இரவு நேரத்தில் இரண்டு பேருந்துகள் விடப்படும் (அதாவது திருச்சியிலிருந்து இரண்டும், சென்னையிலிருந்து இரண்டுமாக அதிகப்படியாக நாள்தோறும் நான்கு பஸ்கள் விடப்படும்.)

திருச்சி --- நாகர்கோவிலுக்கு இடையே இரண்டு இரவு நேரப் பேருந்துகள்

திருச்சியிலிருந்து நாகர்கோவிலுக்கு இரண்டு இரவு நேரப் பேருந்துகளும், நாகர்கோவிலிலிருந்து திருச்சிக்கு இரண்டு இரவு நேரப் பேருந்துகளும்விடப்படும்; இந்தப் பேருந்துகள், வேலூர், மதுரை, கோவில்பட்டி திருநெல்வேலி வழியாகச் செல்லும்.

புதிய விரைவுப் பேருந்துகள்

தமிழக அரசின் போக்குவரத்துத் துறை ஏற்பாடு

கோவை, நவ 28—

கோயம்புத்தூர் நகரிலிருந்து திருநெல்வேலிக்கு இரவு நேர விரைவும் பேருந்து ஒன்றைக் கூடுதலாக விடுவதற்குத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை முடிவு செய்துள்ளது; நேற்று முதல் இந்தப் புதிய பேருந்து இயங்கத் துவங்கியது.

கோவையிலிருந்து நாள்தோறும் இரவு 8 30 மணிக்கு இந்தப் பேருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட்டுச் செல்லும்; திருநெல்வேலியிலிருந்து வரும் பேருந்து காலை 5-15 மணிக்கு கோவைக்கு வந்து சேரும்.

மேலும் பல புதிய (பகல் நேர) விரைவுப் பேருந்துகளும் கோவையிலிருந்து விடப்பட்டிருக்கின்றன.

கோவையிலிருந்து ஈரோடு—பள்ளிப்பாளையம் வழியாகச் சேலத்துக்குப் புதிய விரைவுப் பேருந்து விடப்படுகிறது; மொத்தத்தில் இந்தப் பேருந்து 3 'டிரிப்'கள் பயணமாகும்.

மற்றொரு விரைவுப் பேருந்து கோவையிலிருந்து பவானி வழியாகச் சேலத்துக்குப் போகும்; இந்தப் பேருந்தும் மொத்தத்தில் 3 'டிரிப்'கள் பயணமாகும்.

உதகமண்டலத்திற்கும் கோயமுத்தூரிலிருந்து மேலும் ஒரு விரைவுப் பேருந்து விடப்படுகிறது; இந்தப் பேருந்து 2 'டிரிப்'கள் பயணமாகும்.

கோவையிலிருந்து மதுரைக்கும் புதிதாக இரு விரைவுப் பேருந்து

புதிய 'ரூட்'களில் விரைவுப் பேருந்துகள்

இது தவிர, கீழ்க்கண்ட ஐந்து புதிய 'ரூட்'களில் பகல் நேர விரைவுப் பேருந்துகள்விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருச்சியிலிருந்து சிதம்பரத்துக்கு அரியலூர் வழியாக ஒரு பேருந்தும், மாயூரம் வழியாக ஒரு பேருந்தும் விடப்படும்.

திருச்சியிலிருந்து பொள்ளாச்சிக்கு பழனி வழியாக ஒரு விரைவுப் பேருந்தும், உடுமலைப் பேட்டை வழியாக ஒரு விரைவு பேருந்தும் விடப்படும்.

அதேபோன்று பொள்ளாச்சியிலிருந்து திருச்சிக்கு இரு பேருந்துகள் விடப்படும்.

திருச்சியிலிருந்து மண்டபம் முகாமுக்குப் புதுக்கோட்டை-காரைக்குடி—தேவக்கோட்டை—இராமநாதபுரம் வழியாக இரு விரைவுப் பேருந்துகள் விடப்படும்; அதே போன்று மண்டபம் முகாமிலிருந்து திருச்சிக்கு இரண்டு பேருந்துகள விடப்படும்.

திருச்சியிலிருந்து புதுச்சேரிக்கு இரண்டு பேருந்தும், அதே போன்று புதுவையிலிருந்து திருச்சிக்கு இரு பேருந்துகளும் விடப்படும்.

திருச்சியிலிருந்து ஈரோடுக்கு குளித்தலை—கரூர் — கொடுமுடி வழியாக ஒரு பேருந்தும், அதே வழியில் ஈரோடிலிருந்து திருச்சிக்கு ஒரு பேருந்தும் விடப்படும்.

அம்பாசிடர்--பியட்--ஸ்டாண்டர்டு-- ஹெரால்டு கார் தொழிற்சாலை

மத்திய அரசு மேற்கொள்ளும் நிலை

மக்களவையில் அமைச்சர் தந்த தகவல்கள்

புதுடில்லி, நவ. 27—

மக்களவையில், தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் மொயினுல் ஹக் சவுத்திரி, அம்பாசிடர் கார் தொழிற்சாலையை, 'காமாலை கண்ட தொழிற்சாலை' என்று கூறியபோது, அவையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது.

"நாட்டின் நலனைக் கருதியே அத்தொழிற்சாலையை அரசு மேற்கொள்வதற்கில்லை; அது மிகப் பழமையானது; எனவே, சொந்தமாகத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு தீர்மானித்திருக்கிறது"

என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"பியட் கார் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அதனை மேற்கொள்வது பற்றி அரசு பரிசீலனை செய்துவருகிறது.

"ஸ்டாண்டர்டு ஹெரால்டு கார் தொழிற்சாலைப் பிரச்சினையை இதுவரையில் அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை; இதுபற்றி நிச்சயமாகக் கவனிக்கப்படும்."

இதுவரையில் எல்லை மீறிய சம்பவங்கள்

புதுடில்லி, நவ 28—

"சென்ற ஜூன் மாதம் 1-ந் தேதியிலிருந்து இன்று வரையில் 1,392 தடவைகள் பாகிஸ்தானிய துருப்புகள் எல்லைகளை மீறின"

என்று மக்களவையில், பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

வங்க தேசம் — அங்கீகாரம்

விரைவில் இந்தியா முடிவு செய்யக்கூடும்

அகதிகளைத் திருப்பியனுப்ப இது ஒன்றே வழி

புதுடில்லி நவ. 29—

வங்க தேசப் பிரச்சினை, சமாதானமாகத் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை அற்றுப்போனால், வங்க தேசத்தை இந்தியா அங்கீகரிக்கக்கூடும் என்று கருதப்படுகிறது; வங்க தேசத்தை அங்கீகரித்த பிறகு, அந்நாட்டுடன் ஓர் ஒப்பந்தம் செய்து — எல்லா உதவிகளையும் அளித்து — அகதிகள் தன்மானத்துடனும் கௌரவத்துடனும் திரும்பச் செய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்று நோக்கர்கள் கருதுகின்றனர்.

எல்லைப் பகுதிகளைப் பார்வையிட்டு, ஜெய்ப்பூரில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் தலைமையமைச்சர், இந்தப் பிரச்சினை பாதுகாப்புச் சபையில் எழுப்பப்படுவதற்குச் சிலர் முயற்சிப்பதைக் குறிப்பிட்டார்.

'பாதுகாப்புச் சபையால் எந்தப் பயனும் ஏற்படாது' என்று கூறிய அவர், கடந்த காலத்தில் இந்தியாமீது பாகிஸ்தான் பலதடவை ஆக்கிரமிப்புச் செய்தபோது பாகிஸ்தானைத் தட்டிக்கேட்பதற்குப் பாதுகாப்புச் சபையால் முடியாமல் போனதைச் சுட்டிக்காட்டினார்.

இந்தியா கடுமையாக எதிர்த்துவருவதால் பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் பலரும், 'இந்த விவாதத்தால் பயன் இருக்காது' என்று கருதி ஆர்வம் காட்டாமல் இருக்கிறார்களாம்.

ஆயினும், பெல்ஜியத்தால் முன்மொழியப்படவிருக்கும் பாதுகாப்புச் சபை தீர்மானத்தை, எல்லா உலக நாடுகளும் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றனவாம்.

பாகிஸ்தான் இராணுவத்தின் நிலை என்ன?

பாதுகாப்புச் சபையில் இந்த விவாதம் நடைபெற்றாலும், நடைபெறாவிட்டாலும், கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தானின் நிலைமை மிகவும் நெருக்கடியாகிக் கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் படையினர் பாகிஸ்தான் இராணுவத்தினரை திக்குமுக்காடவைக்கின்றனர்.

கிழக்கு வங்கப் போர் — புதிய உருப்பெறும்

அடுத்த சில நாட்களில் கிழக்கு வங்கப் போராட்டம் அரசியல் — இராணுவத் துறைகளில் ஒரு புதிய தோற்றத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

முக்கிய நகரங்களான ஜெஸ்ஸூரும், சில்ஹெட்டும் விரைவில் விடுதலையடைந்துவிடும் என்று செய்திகள் கூறுகின்றன. கோமில்லா — பேனி பகுதிகளிலும் விடுதலைப் படையினரின் நிர்ப்பந்தம், இராணுவத்தினரை கலகலக்க வைத்திருக்கிறதாம்.

துறைமுகங்களெல்லாம் வேலை செய்யாமல் முடங்கிக்கிடக்கின்றன; இரயில் — சாலைப் போக்குவரத்துக்கள் சீராக நடைபெறவில்லை; ஆங்காங்கு இருக்கும் இராணுவ வீரர்கட்கு, விமானம் மூலம்தான் உணவு — மற்றும் பொருட்களை வழங்க வேண்டிய நிலையில் நிர்வாகம் இருந்துவருகிறதாம்.

மிரட்டலுக்கு முக்கியத்துவமில்லை

இந்த நிலையில், யாகியா கானின் போர் மிரட்டலுக்கு யாரும் முக்கியத்துவம் கற்பிக்கவில்லை.

வங்க தேசப் பிரச்சினைக்கு முஜிபுர் ரகிமானுடன் பேசித்தான் தீர்வு காண வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தி வருகிறது; ஆனால் முஜிபுரை விடுதலை செய்யவோ, அவருடன் பேச்சுவார்த்தை நடத்தவோ யாகியா கான் இன்னமும் மறுத்து வருகிறார்.

அமெரிக்க நிர்ப்பந்தத்தின் நிலை

வங்க தேசப் பிரதிநிதிகளிடம் சுதந்தரக் கோரிக்கையைக் கைவிடுமாறும், அதிக சுயாட்சிக்கு இணங்குமாறும் அமெரிக்கா வற்புறுத்தி வருகிறதாம். ஆனால் வங்க தேசத் தலைவர்களில் தீவிரமானவர்கள் இதனை பலமாக எதிர்க்கின்றனராம்.

பிரச்சினையை இந்தியா சந்திக்கும்

இந்தியாவைப் பொறுத்த வரையில், வங்க தேசத்தை அங்கீகரிப்பதை இன்னமும் தள்ளிப்போட முடியாது என்ற கருத்து நிலவுகிறது.

பாகிஸ்தானுடன் போர் மூளும் என்ற நிலைமை ஏற்படுவதாக இருந்தாலும், 'இப்பிரச்சினையை இந்தியா சந்தித்தே தீரவேண்டும்' என்று கருதப்படுகிறது. 'போர் தவிர்க்க முடியாதது' என்று கருதினால் இதில் சிரமமேதும் இல்லை.

ஆகவே சமாதானத் தீர்வுக்கு வாய்ப்பு இல்லை என்று கருதினால், வங்க தேசத்தை அங்கீகரித்து — விடுதலைப் படைக்கு உதவி செய்து — அகதிகள் திரும்ப வகை செய்வது நிச்சயம் என்று நம்பப்படுகிறது.

சென்னை — திருச்சி இடையே மிகு வேக இரயில்

எட்டு மணி நேரத்தில் பயணம் முடியும்

சென்னைக்கும் — திருச்சிக்கும் இடையே மிகு வேக இரயில் ஒன்று விடுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மெயின் லைனில் ஓடும் இந்த விரைவு வண்டியில் டீசல் எஞ்சின் பொருத்தப்படுவதுடன், பிருந்தாவன எக்ஸ்பிரஸ் இரயில் பாணியில் விடப்படும் என்றும் தெரியவருகிறது.

திருச்சியிலிருந்து காலை 6-05 மணிக்குப் புறப்பட்டு பிற்பகல் 1-55 மணிக்கு சென்னைக்கு வரும்.

சென்னையிலிருந்து மாலை 3-மணிக்குப் புறப்பட்டு இரவு 11மணிக்கு திருச்சி போய்ச் சேரும்.

விரைவில் செயல்படவிருக்கும் இத்திட்டம், திருச்சி வட்டார இரயில்பயன்படுத்துவோர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அரும்பாவூரில் அடிக்கல் நாட்டு விழா

வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அரும்பாவூர் பேரூராட்சியின் குடிநீர் வழங்கு திட்டக் கால்கோள் விழாவும், துவக்கப் பள்ளிக் கட்டிடக் கால்கோள் விழாவும் 30—11—71 மாலை 5 மணிக்கு நடைபெறும்; திரு. கே.எஸ். இராசு எம்.எல்.ஏ. தலைமையிலும் — திரு. ஆர். பால சுப்பிரமணியம் (ஒன்றியத் தலைவர்) முன்னிலையிலும், வேளாண்மை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் அடிக்கல் நாட்டுவார்; அதுபோது அமைச்சருக்கு வரவேற்பு இதழ் படித்தளிக்கப்படும்.

தமிழ்ப் பண்பாட்டை மறவாதீர்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி கேட்டனர்; 'வங்காள தேசக் கொரில்லாக்களுக்கு இந்தியா ஆதரவு அளித்தால பின்னர் அதேபோன்று, திராவிடர்கள் — சீக்கியர்கள் போன்றவர்களின் பிரிவினைக் கோரிக்கையை இந்தியா எதிர்நோக்க வேண்டியிருக்கும்" என்று பாகிஸ்தான் பிரதிநிதி பேசியதாகச் செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

இதற்குக் கலைஞர் பதிலளிக்கையில், 'இந்தியாவில யாரும் பிரிவினை கேட்கவில்லை' என்று கூறினார்.

எட்வர்டு கென்னடி மற்றும் அமெரிக்க செனட் மன்ற உறுப்பினர்களுடன் தாம் நடத்திய பேச்சுப்பற்றிக் கலைஞர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"வங்காள தேசப் பிரச்சினையில் இந்தியாவின் பக்கமுள்ள நியாயத்தை அவர்கள் அமெரிக்க செனட் மன்றத்திலும் — பிரதிநிதிகள் அவையிலும் எடுத்துச் சொன்னால மட்டும் போதாது; அமெரிக்க மக்களிடையே மேலும் மேலும் எடுத்துக் கூற வேண்டும்.

"வங்காள தேச மக்களுக்கு அமெரிக்க செனட் உறுப்பினர்கள் பலர் அளித்துவரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்; வங்காள தேசப் படுகொலையை வெளிப்படுத்திய அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்."

செய்தியாளர்:—"நீங்கள் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டிருப்பது உங்கள் சொந்த முடிவின்மீதா அல்லது தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்த யோசனை மீதா?"

கலைஞர்:—"நான் இந்தியாவுக்காக வந்துள்ளேன் — இந்திராவுக்காக அல்ல."

மற்றும் கலைஞர் அவர்கள் இந்த அமெரிக்கப் பயணததில தமமைக கவர்ந்த அம்சங்கள் பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"கென்னடி முனைக்குச் சென்றிருந்தபோது, விஞ்ஞானம் — தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளர்ச்சி, மனிதனை அம்புலியில் இறக்குவதற்கு மட்டுமன்றி வேளாண்மைத்துறை மற்றும் பல்வேறு துறைகளில் மக்களுக்கு எண்ணற்ற வகையில் பலன் அளிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கண்டேன்.

"கம்பியூட்டர்கள் பல்வேறு பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வதும் என்னை மிகவும் கவர்ந்தது.

"கம்பியூட்டர்கள்வந்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுவிடும் என்ற கருத்து இந்தியாவில் நிலவி வருகிறது; ஆனால், அமெரிக்காவில் அப்படித் தோன்றவில்லை.

"பொருளாதாரம் பற்றிய பல்வேறு பிரச்சினைகளைச் சமாளிப்பதற்குக் கம்பியூட்டர்களின் பணி தேவை."

சிகாகோவில்:

கலைஞர் இன்று சிகாகோ நகரில் அமைந்துள்ள விஞ்ஞானத் தொழில்நுட்பப் பொருட்காட்சிக் கூடததுக்குச் சென்று பார்த்தார்; அப்பொருட்காட்சிக் கூடத்தின் தலைவர் கலைஞர் அவர்களை எதிர்கொண்டு வரவேற்று அழைத்துச் சென்று, காட்சிக் கூடத்தில் உள்ளவற்றைக் குறித்து விளக்கினார்.

சிகாகோ விஞ்ஞானத் தொழில் நுட்பக் கழகத்தின் கௌரவ உறுப்பினராகக் கலைஞர் அவர்களை ஏற்றுக்கொண்டார்கள்.

சிகாகோவில் உள்ளதுபோல் தமிழகத்திலும் விஞ்ஞானத் தொழில் நுட்பக் காட்சிக் கூடததை ஏறபடுத்த விரும்பிய கலைஞர், அவ்வாறு அமைபபதற்கான திட்டத் தேவைகள் பற்றி அந்தக் காட்சிக் கூட அதிகாரிகளுடன் விவாதம் நடத்தினார்.

கம்ப்பியூட்டர் தயாரிப்பு — சத்துணவுத திட்டம் ஆகியவை பறறியும் அதிகாரிகளுடன் கலைஞர் கலந்துரையாடினார்.

கல்வி நிபுணர்களுடன்:

நியூயார்க் நகரில் தங்கியிருக்கும் போது தமிழ்நாட்டுக் கல்வி முறையின் தனமைகளில் மாறுதல் செய்வதுபற்றிக் கலைஞர் முக்கியமான விவாதம் நடததுவார்.

கலைஞருடன் விவாதிப்பதற்காக அமெரிகக நாட்டின் புகழ்பெற்ற கல்வி நிபுணர்கள் மூன்றுபேர் சான்பிரான்சிஸ்கோவிலிருந்தும், மின்னிசோடாவிலிருந்தும் நியூயார்க் நகருக்கு வருகின்றனர்.

டாக்கா நகரம் துண்டிக்கப்பட்டது

புதுடில்லி, நவ. 29—

"டாக்காவைச் சுற்றிலும் கொரில்லா நடவடிக்கைகள் மேலும் பலப்பட்டிருக்கிறது"

என்று பி.பி.சி.-யின் நிருபர் தெரிவித்திருக்கிறார்.

டாக்கா நகரத்தின் வெளியே 17 பாலங்களைக் கொரில்லாக்கள் தகர்த்துவிட்டு, சாலைப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்து வருவதாகவும், சில பகுதிகளில் நீர்ப் போக்குவரத்துக்களை [illegible] நிலை குலையச் செய்துவிட்டிருப்பதாகவும் அச்செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ரூ. 6 இலட்சம் செலவில் கட்டப்பட்ட ஆமில்டன் பாலம்

அமைச்சர் நெடுஞ்செழியன் திறந்துவைத்தார்

சென்னை, நவ. 28 —

சென்னையில் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ள ஆமில்டன் பாலத்தைக் கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கடந்த வியாழக்கிழமை திறந்து வைத்தார்.

திருவல்லிக்கேணியையும் — மயிலாப்பூரையும் இணைப்பது 'ஆமில்டன்' பாலம்; இந்தப் பாலம், ஏறத்தாழ 350 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்டது; மிகவும் குறுகலானது.

இப்போது போக்குவரத்து அதிகமாகிவிட்டபடியால், அந்தப் பாலத்தை இடித்துவிட்டு அதே இடத்தில் ரூ. 6 இலட்சம் செலவில் புதிதாகப் புதுப்பித்துப் பாலம் கட்டப்பட்டு உள்ளது.

இந்தப் பாலத்தின் நீளம் 176 அடி — அகலம் 44 அடி; பாலத்தின் இருபுறமும் 5 அடி அகலத்திற்கு நடைபாதைக்கு என்று தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பாலத்தை, சென்னை மாநகராட்சி கட்டி முடித்தது; பாலத்தைக் கட்டுவதற்குத் தமிழக அரசு சென்னை மாநகராட்சிக்கு ரூ. 3 இலட்சம் கடனாகவும் — ரூ. 3 இலட்சம் மானியமாகவும் கொடுத்திருக்கிறது.

இந்தப் பாலத்தின் திறப்பு விழாவுக்கு மேயர் சா. கணேசன் தலைமை தாங்கினார்.

தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஜே சாதிக் பாட்சா முன்னிலையில், விழா நடைபெற்றது.

மாநகராட்சி உறுப்பினர் கே. கோவிந்தசாமி நன்றி கூறினார்.

நகரின் வனப்பைப் பேணிக் காப்பது அவசியம்

"நகரையும், தெருக்களையும் அழகாகவும் துப்புரவாகவும் வைத்துக்கொள்ளும்படிச் செய்வதற்காக வட்டங்கள்தோறும் — வீதிகள் தோறும் கூட, 'உஷர் கமிட்டி'களை அமைக்க வேண்டும்.

'நகரின் தற்போதைய வனப்பைப் பேணிவருவதுடன் மட்டுமன்றி அதை மேம்பாடுச் செய்யவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி மாநகராட்சி உறுப்பினர்களையும் — அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறேன்.

"நகரின் வாழ்க்கை வசதிகள் மேலும் மோசமானால், திருத்த முடியாதபடி கேடு விளைந்துவிடும்.

"சாலைகளில் ஒரு சிலர் நடத்தும் 'ஆக்கிரமிப்பு'களால் சில இலட்சம் பேருக்குச் சிரமங்கள் ஏற்படுகின்றன; ஆகவே, பொது சாலைகளில் ஆக்கிரமிப்புச் செய்ய வேண்டாமெனப் பொது மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

எஸ். ஜே. சாதிக்பாட்சா

பொதுப் பணித் துறை அமைச்சர் எஸ். ஜே சாதிக்பாட்சா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நெடுஞ்சாலைகளில் நடந்துள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற அரசு தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறது.

"கோவையிலும், ஈரோடிலும் அனுமதியின்றி நெடுஞ்சாலைகளில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, ஆதியப்ப நாயக்கன் தெரு, சென்னை-1) [illegible]